முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள்.06.03.2026

O.S No. 266/2014

பி.வா.சா.1- விக்னேஷ்குமார்

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வாதிகள் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் 2014 ல் எனக்கு எழுதிய செட்டில்மென்ட் ஆவணத்தை ரத்து செய்ய கேட்டுள்ளார். என்னுடைய பாட்டி 2018 ல் இறந்தார். 2009 ல் வாதிகளுக்கு எழுதிய செட்டில்மென்ட் பத்திரத்தில் எனது பாட்டி உயிருடன் இருக்கும் வரை சொத்தின் அனுபவம் அவர் வசம் இருக்கும் என்ற நிபந்தனை உள்ளது என்றால் சரி. எனது பாட்டியின் அனுபவத்தில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருப்பதால் நான் 2014 ல் தாக்கல் செய்த எதிர்கோருரிமை வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

2009 செட்டில்மென்ட் ஆவணத்தின் படி வாதிகள் சொத்தின் உரிமையாளர் என்பதால் எதிர்கோருரிமையில் நான் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பி,வா.சா.ஆ.46,47 ஆவணங்கள் என் பாட்டி பெயரில் உள்ளது என்றால் சரி. நான் சட்டத்திற்கு புறம்பாக வழக்கு சொத்தை நான் அனுபவித்து வருவதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தில் முழு சொத்து 15.55 சென்ட் என்று குறிப்பிட்டு தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. வீதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் வீதம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எதிர்கோருரிமை கேட்க எந்த முகாந்தரமும் இல்லை என்றாலும் எதிர்கோருரிமை தள்ளுபடி செய்யதக்கதென்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது)